**O.S.No. 33/2014 DW1 – நடராஜன் 14.09.2023**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் நிலம் வாங்கி, விற்கும் தொழில் 30 வருடங்களாக செய்கிறேன். நான் கரூரில் மட்டும் நிலங்களை வாங்கி, விற்பனை செய்கிறேன். நான் வருமானவரி முறையாக செலுத்தி வருகிறேன். 15 வருடங்களாக வருமானவரி செலுத்தி வருகிறேன். நான் நிலம் வாங்கி விற்பனை செய்யும் தொழிலை தவிர வேறு தொழில் செய்யவில்லை. வாதியின் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியாது. வாதி எனக்கு எப்படி பழக்கம் என்றால் இடத்தை விற்பனை செய்வதற்காக என்னிடம் வந்தபோது பழக்கம். நிலத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு சட்டக்கருத்துரை பெறுவேன். வாதி கிரயம் பதிவு செய்வதற்கு ஒருவாரத்திற்கு முன்பு என்னை வந்து பார்த்தார். வாதியின் குடும்பமும், என் குடும்பமும் ஒரே பகுதியில் வசிக்கிறோமா என்றால் வாதி குடும்பத்தினர் பெரியக்குளத்துப்பாளையத்திலும், நான் சின்னக்குளத்துப்பாளையத்திலும் வசித்து வருகிறோம். என் வீட்டிலிருந்து வாதி வீடு சுமார் 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. வாதியும், நானும் ஒரே சாதியை சேர்ந்தவர்கள்.

வாதி தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்கு காலஅவகாசம் கோருகிறார். ஏற்கனவே சாட்சி 05.09.2023 அன்று முதல்விசாரணை செய்யப்பட்டு, வாதியின் வேண்டுகோளுக்கிணங்க 07.09.2023 அன்று ஒத்தி வைக்கப்பட்டது. 07.09.2023 அன்று சாட்சி முன்னிலையாகி, வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க செலவுத்தொகை செலுத்தவேண்டுமென இன்றைய தேதியில் ஒத்திவைக்கப்பட்டது. இன்றைய தேதியில் சாட்சி பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, மேலும் தொடர்வதற்கு காலஅவகாசம் கோரப்பட்டது. காலஅவகாசம் மறுக்கப்பட்டது. தொடர்ந்து வாதி தரப்பு வழக்கறிஞர் காலஅவகாசம் கேட்கிறார். எனவே பி.வா.சா.1 சாட்சியம் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

ஓம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட நீதிபதி,
கரூர்.